2019 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட கருவேப்பிலங்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தியும், அதற்கு போதுமான இட வசதி இல்லாத காரணத்தினால், புதிய கட்டடங்கள் அமைத்துத் தரவும் அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

தென்னை ஆராய்ச்சி நிலையம்

***25056—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட தொண்டியக்காடு, கரையாங்காடு, ஜாம்புவானோடை, கற்பகநாதர்குளம் ஆகிய பகுதிகளில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட தொண்டியக்காடு, கரையாங்காடு, ஜாம்புவானோடை, கற்பகநாதர்குளம் ஆகிய பகுதிகளில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும், கழகத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய மாவட்ட செயலாளர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி தொகுதி, காவேரி டெல்டா பகுதியினுடைய கடைசி பகுதி. அந்தப் பகுதியில் சாகுபடி செய்வதற்கு நிலத்தடி நீர் உகந்ததாக இல்லாத காரணத்தால், தற்போது சுமார் 10 ஆயிரம் hectare பரப்பளவில் தென்னை மரங்களைச் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்தத் தென்னை மரங்கள்கூட கஜா புயலினால் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுடைய பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பேரழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காக தென்னையினுடைய தாவரவியல் நுணுக்கங்கள், மரபணு மாற்றங்கள், இனப்பெருக்கங்கள், மாதிரி தென்னை சாகுபடி செய்யும் முறைகள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நீர்ப்பாசன முறைகள் ஆகியவை கண்டறியப்பட வேண்டும்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. ப. ஆடலரசன்: *தென்னை மரங்களை வளர்த்து இடமாற்றம் செய்து நடுவது போன்ற தொழில்நுட்பங்களைத் தெரிந்துகொள்வதற்கு ஆராய்ச்சி நிலையம் உதவியாக இருக்கும். தற்போது ஆண்டு சராசரி உற்பத்தித் திறன் ஒரு மரத்திற்கு 80 முதல் 120 காய்கள் என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த*

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2019 ஜூலை 9]

நிலையை மாற்றி உற்பத்தியை 200 காய்களாக உயர்த்துவதற்கான தொழில்நுட்பங்களை அறிவதற்கு தென்னை விவசாய ஆராய்ச்சி நிலையம் உறுதியாகவும், உதவியாகவும் இருக்கும். ஆகவே, அந்தப் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். இருந்தாலும், புதிதாக தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதில் 50 சதவிகிதப் பரப்பிற்கு பாசன வசதியும், நீர்வள ஆதாரமும் தேவை. மேலும், பல் பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சுமார் 75 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

மேலும், தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க உத்தேசித்துள்ள மதிப்பினைப் பொறுத்து நிதித் தேவை மாறுபடும். ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்குத் தேவையான மனித ஆற்றல், பண்ணையின் அளவை பொறுத்து மாறுபடும்.

தஞ்சாவூர் மாவட்டம்,பட்டுக்கோட்டை வட்டம்,வேப்பங்குளம் கிராமத்திலும், கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாரிலும் தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் பிரத்யேகமாக தென்னை சாகுபடி மற்றும் பயிர்ப் பாதுகாப்பு குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேவைப்படும்போது பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், தஞ்சாவூரில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும், பட்டுக்கோட்டையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி நிலையமும் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமான திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றது. விவசாயிகள்

தென்னை உட்பட அனைத்துப் பயிர்கள் சாகுபடி சார்ந்த விளக்கங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையங்களின் விஞ்ஞானிகளை அணுகி, ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட தொண்டியக்காடு, கரையாங்காடு, ஜாம்புவானோடை, கற்பகநாதர்குளம் ஆகிய பகுதிகளில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கே நிலத்தடி நீரும் உப்பாக இருக்கின்ற காரணத்தாலும், சாகுபடிக்கு தற்போது காவேரியிலிருந்து நீர் வரத்து இல்லாத காரணத்தாலும், அந்தப் பகுதியில் தென்னை விவசாயத்தையே நம்பி வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்காக தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டால், அது அவர்களுக்கு பயன்படும் என்கிற காரணத்தால்தான், இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கிறேன். மேலும், உப்பு நீரைக் கொண்டு தென்னை வளர்ப்பினை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வைக்க விரும்புகிறேன்.

மேலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணத்தொகை வழங்கப்படாமல் உள்ளது. இரண்டாம் கட்டமாக நிவாரணத் தொகை வழங்கப்பட்டபோதும்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையாகச் சென்றடையவில்லை. முதல்கட்ட நிவாரணத் தொகைகூட இதுவரை முத்துப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் வாழும் தென்னை விவசாயிகளை சென்றடையவில்லை. விவசாயிகளுக்கு ஆடிப் பட்டம் மிக முக்கியமான காலமாக இருப்பதால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்பட்டால், ஆடிப் பட்டத்தில் பயிர் செய்து, விவசாயிகள் தங்களுடைய வருங்கால நிலையினை உயர்த்திக்கொள்வதற்கு

2019 ஜூலை 9]

சாதகமாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கஜா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்று இங்கே தெரிவித்திருக்கிறார். கூடுமான வரையில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டன. ஒரு சிலர் வங்கிக் கணக்குகளை சரிவர கொடுக்காத காரணத்தால்தான் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாக வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நீராதாரத்தையும், இடத்தையும் பொறுத்து, அதன் விவரங்கள் இருக்கும்பட்சத்தில், தேவையிருப்பின் அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திலே ராணிப்பேட்டையில் நவ்லாக் பகுதியிலே தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வந்தது. அங்கே மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வந்தன. தென்னை உற்பத்தி நெட்டை, குட்டை என இரண்டு வகைகளாக தற்போது மாறியிருக்கின்றது. குட்டை தென்னையை அந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்கிறார்களா? நெட்டை தென்னை வகைக்கான விதை கன்றுகள் மட்டும்தான் உற்பத்தி செய்கிறார்களா? மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் விற்பனை செய்கிறார்கள். அங்கு சென்று பார்த்தால், அந்த இடத்தில் ஒரு தென்னங்கன்று ரூ.400, ரூ.500, ரூ.600 என்று சொல்கிறார்கள். உங்களுடைய ஆராய்ச்சி நிலையத்தில் அந்தக் குட்டை மற்றும் நெட்டை தென்னங்கன்றுகளை என்ன விலைக்கு விற்கிறீர்கள்? குறிப்பாக நமது பகுதிகளிலும் அது கிடைக்குமா

என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், ராணிப்பேட்டையில் நெட்டை, குட்டை வகை தென்னைக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்று கேட்டார்கள். நெட்டை, குட்டை தென்னைகள் இரண்டுமே அங்கு தயார் செய்யப்படுகின்றன. தற்போது பண்ணைகளில் அதிகமாக அதனை உற்பத்தி செய்து, முளைக்க வைத்து, அந்தந்தப் பகுதிகளிலுள்ள கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தொடர்ந்து அந்தப் பண்ணையில் தென்னங்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

புதிய பேருந்துகள்

***8214—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் உள்ள போக்குவரத்துப் பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?